செ.வெ.எண் : 273/2019 நாள் : 02.04.2019

**வாக்கு எண்ணும் மையத்தினை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் பொது பார்வையாளர் மரு.காஜல் இ.ஆ.ப.,மற்றும் தேர்தல் காவல் பார்வையாளர்/காவல் கண்காணிப்பாளர் திரு.பாபு ராம் இ.கா.ப., ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்**

பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019, தேர்தல் பொது பார்வையாளர் மரு.காஜல் இ.ஆ.ப.,மற்றும் தேர்தல் காவல் பார்வையாளர்/காவல் கண்காணிப்பாளர் திரு.பாபு ராம் இ.கா.ப., ஆகியோர் இன்று (02.04.2019) நாகர்கோவில், கோணம் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தினை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

வருகின்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலையொட்டி, கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதிக்குட்ப்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்களித்ததை சரிபார்க்கும் இயந்திரம் (VVPAT) மெஷின்கள் ஆகியவை வைக்கப்படவுள்ள பாதுகாப்பு அறைகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள். மேலும், வாக்கு எண்ணிக்கையினை கண்காணிக்க சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தும் பணியினையும் பார்வையிட்டார்கள். வாக்கு எண்ணும் மையத்தில் பாதுகாப்பு பணிகள், வாக்கு எண்ணும் மையத்தில் ஒரு நுழைவாயில் மட்டும் அமைக்கப்பட வேண்டும் என்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேகரிக்கும் மையம் வாக்கு எண்ணும் அறையோடும் வைப்பறையோடும் தொடர்புடையதாக அமைக்கவேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். வேட்பாளர்களுடைய முகவர்கள் வருவதற்கு தனியாக தடுப்பு கட்டைகள் வைத்து பாதை உருவாக்கவேண்டும். வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அத்தனை அலுவலர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, சார் ஆட்சியர் (நாகர்கோவில்) திரு.பா.விஷ்ணு சந்திரன் இ.ஆ.ப., வட்டாச்சியர் (அகஸ்தீஸ்வரம்) திரு.அனில்குமார் உள்ளிட்ட பல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.